

நடேஷ் ஆர்ட் பிக்சர்ஸ்

# என் கடமை

தயாரிப்பு டைரக்ஷன்
M. நடேசன்

நடேஷ் ஆர்ட் பிக்சர்ஸ்

# "என் கடமை"

நடிகர்கள் :

மக்கள் திலகம்

**எம். ஜி. ராமச்சந்திரன்**

—இன்ஸ்பெக்டர் நாதன்

**எம். ஆர். ராதா**

—தருமலிங்கம்

**எம். என். நம்பியார்**

—சங்கர்

**கே. பாலாஜி**

—ரவி

**நாகேஷ்**

—திரிலோகம்

K, பார்த்தசாரதி
வாணக்கார தெரு,
நாகப்பட்டினம்

நடிகைகள் :

**பி. சரோஜாதேவி**

—சரசு

**எல். விஜயலட்சுமி**

—உமா

**மனோரமா**

—பஞ்சவர்ணம்

**சி. கே. சரஸ்வதி**

—மரகதம்

**சுசீலா**

—கமலா

**பேபி கா**

மற்றும் பலர்

கதை, வசனம் :

மா. ரா.

பாடல்கள் :

கண்ணதாசன்

இசை அமைப்பு :

விஸ்வநாதன் ராமமூர்த்தி

ஒளிப்பதிவு :

R. சம்பத்

பாடல்கள் ஒலிப்பதிவு :

மெஜஸ்டிக் T. S. ரங்கசாமி

நடனம் :

ஹீராலால்
K. S. கோபாலகிருஷ்ணன்

ஸ்டண்ட் மாஸ்டர் :

சியாம்சுந்தர்

எடிட்டிங் :

A. முருகேசன்

கலை :

C. ராகவன்

ஒப்பனை :

ராம்தாஸ், சபாபதி
பீதாம்பரம், கஜபதி, ராமு,
ராமசாமி, ஜேயராமன்

ஆடையலங்காரம் :

முத்து (M.G.R.)
ரகிமான் (B. சரோஜாதேவி)
நடராஜன், சண்முகம்

ஸ்டில்ஸ் : ஞானம்

புரொடக்ஷன் எக்ஸிகூடிவ்:

N. நீலகண்டன்

புரொடக்ஷன் :

H. P. மணி (அம்பி)
S. செல்வமணி

ஆபீஸ் நிர்வாகம் :

N. சூரியமுத்து
G. வேங்கடேசன்

உதவியாளர்கள் :

டைரக்ஷன் :

வேம்பத்தூர் கிருஷ்ணன்

வசனம் :

C. N. முத்து

எடிட்டிங் :

S. ராஜன்

ஒப்பனை :

K. சந்திரன்

ஆடை அலங்காரம் :

நல்லிசாமி, சுருளிமுத்து

புரொடக்ஷன் :

M. சேகர், K. ஜார்ஜ்,
P. குணசேகரன்

ஸ்டுடியோ :

நேப்டியூன்—வாஹினி—
சிட்டாடல்

தயாரிப்பு & டைரக்ஷன் :

M. நடேசன்

# கதைச் சுருக்கம்

★ பிறப்பவர்களெல்லாம் மனிதர்கள் தான்! ஆனாலும், சமுதாயத்தில் தனக்கு ஏற்பட்டிருக்கும் கடமையைக் கண்ணுகப் போற்றி, வாழ்நாளை அதற்காகவே அர்ப்பணிப்பவரைத்தான் ''மனிதருள் தெய்வம்'' என்கிறோம்.

★ இன்ஸ்பெக்டர் நாதன் ஒரு கடமை வீரர். ஆதரவற்ற ஒரு அபலைப் பெண்ணான கமலாவுக்கு அவர் கருணை காட்ட முற்பட்டதால், அவருக்கு ஏற்பட்ட சோதனைகள் தான் எத்தனை ?

★ கமலாவின் கணவன் தன் தந்தையின் விருப்பத்திற்கு எதிராக அவளை மணந்ததால் அவன் இறந்த பின், கமலாவின் குழந்தையைக் காப்பாற்றக்கூட மறுத்துவிடுகிறார் கமலாவின் மாமனாரான முகையூர் பகவதி விலாஸ் தர்மலிங்கம். கமலாவுக்கு ஆதரவாக வழக்காடும் நாதன், அவளை முகையூருக்கு அனுப்பிவைக்கிறார்.

★ வழக்கிற்கு முதல் நாள் முகையூருக்குப் போகும் நாதன், தருமலிங்கம் வீட்டருகே ஒரு கொலை நடப்பதைக் காண்கிறார்! அதற்கேற்றாற்போல் கமலா கோர்ட்டிற்கும் வரவில்லையாதலால், தருமலிங்கத்தால் கமலாவின் உயிருக்கு ஆபத்து நேர்ந்திருக்குமோ என்று சிந்தை கலங்குகிறார். தருமலிங்கம் வீட்டின் பயங்கர சூழ்நிலை வேறு அவர் சந்தேகத்தை வலுவடையச்செய்கிறது.

★ இதற்கிடையில் தருமலிங்கத்தின் மகள் சரசு இன்ஸ்பெக்டர் நாதனைக் காதலிக்க ஆரம்பித்துவிடுகிறாள்! இதன் காரணமாக நாதன் தருமலிங்கத்தின் வீட்டாரோடு நெருங்கிப் பழகுவதோடு அந்த வீட்டிலே தாராளமாக நடமாட வாய்ப்பும் கிடைக்கிறது.

★ ஆனால், எதிர்பாராத விதமாக ஒரு நாள் கமலாவின் பிணத்தை அந்த வீட்டிலே கண்டுபிடிப்பதோடு, தன் தங்கை உமாவும் அந்த வீட்டில் அடைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறார்.

★ தருமலிங்கம் கைது செய்யப்படுகிறார்.

★ உமாவின் காதலனும் தருமலிங்கத்தின் மகனுமான சங்கரின் மேல் வாரண்ட் பிறப்பிக்கப்படுகிறது!

★ கமலாவைக் கொன்றது யார்? — சட்டம் கேட்கிறது!

★ நீங்கள் உண்மையிலேயே என் காதலர் தானா? — சரசு கேட்கிறாள்!

★ இதுவா உங்கள் பாசம்? — உமா கேட்கிறாள்!

★ எங்களை ஏன் பழிவாங்குகிறாய்? — தருமலிங்கம் கேட்கிறார்!

★ நீயா எங்களை வாழவைப்பாய்? — சங்கர் கேட்கிறான்!

★ நான் என்னதான் செய்வது? — நாதனின் மனமே கேட்கிறது!

★ '' நான் யாருக்குப் பதில் சொல்வது? யாரை வாழ வைப்பது? வருவது வரட்டும், நடப்பது நடக்கட்டும்'' என்று கடமை என்னும் பாதையில் வீர நடை போடுகிறார் நாதன்!

**அவரைப் பின் பற்றுங்கள், எல்லாம் விளங்கிவிடும்!**

# பாடல்கள்

இயற்றியவர் : பாடியவர் :

**கண்ணதாசன்** **1** **பி. சுசீலா**

சரசு : தேனோடும் தண்ணீரின் மீது
மீனோடு மீனாக ஆடு
செவ்வாழைக் கால்கள் பொன்வண்டுக் கண்கள்
ஜில்லென்று நீராட ஆடு
தத்தித்தத்திச் செல்லும் தவளைகள் உன்னை
தங்கை போல் நினைக்கட்டுமே
தாமரையில்லா குளத்தினில் உன்முகம்
தாமரை ஆகட்டுமே
சின்னச்சின்னத் தோணி தவழ்வது போலே
கன்னியுடல் மிதக்கட்டுமே
திருமகள் கொண்ட மருமகள் போலே
ராஜாங்கம் நடக்கட்டுமே
கட்டவிழ்ந்த கூந்தல் வெட்டிவேர் போலே
தண்ணீரில் நனையட்டுமே
கூந்தலின் வாசம் காற்றினில் ஏறி
நாடெங்கும் மணக்கட்டுமே

## பாட்டு 2

இயற்றியவர் : பாடியவர் :

**கண்ணதாசன்** **பி. சுசீலா**

சரசு : மீனே மீனே மீனம்மா
விழியைத் தொட்டது யாரம்மா
தானே வந்து தழுவிக் கொண்டு
சங்கதி சொன்னது யாரம்மா
என் பாட்டுக்கு ஒருவன் இசையானான்
பார்வைக்கு ஒருவன் சிலையானான்
பேச்சுக்கு ஒருவன் மொழியானான்
பெண்மைக்கு அவனே துணையானான்

என் தோட்டத்தில் காவல் அவனம்மா
சொல்லடி சொல்லடி யாரம்மா
அவன் ஆட வைத்தான் என்னைத் தேராக
ஓட வைத்தான் என்னை நீராக
சூடி விட்டானே மலராக
துள்ள வைத்தானே மானாக
தூக்கம் வராமல் தடுத்தவன் அவனம்மா
சொல்லடி சொல்லடி யாரம்மா

## பாட்டு 3

இயற்றியவர் :
**கண்ணதாசன்**

பாடியவர்கள் :
**டி. எம். சௌந்திரராஜன்**
**பி. சுசீலா**

ஆண் — ஐ ஆம் சாரி...
பெண் — ஆ... நீங்களா...
ஆண் — ம்...
பெண் — ஏன் இப்படி
ஆண் — உனக்காக
பெண் — ம்...
ஆண் — யாரது யாரது தங்கமா
பேரெது பேரெது வைரமா
ஊரெது ஊரெது சொர்க்கமா
ஊறிடும் தேனெது வெட்கமா
பெண் — யாரது யாரது சிங்கமா
பேரெது பேரெது செல்வமா
ஊரெது ஊரெது வீரமா
ஊறிடும் தேனதன் சாரமா
ஆண் — கள்ளூறும் மலரென்ன பெண்ணானதோ
கருநாவல் பழமென்ன கண்ணானதோ
தள்ளாடித் தள்ளாடி நடைபோடுதோ
தணியாத சுகமென்னும் கடைபோடுதோ

பெண் — முதிராத கனியென்ன முகமானதோ
முளைக்காத கரும்பென்ன மொழியானதோ
சிதறாத முத்தென்ன நகையானதோ
சிங்கார ரதமெந்தன் துணையானதோ

ஆண் — அணைத்தாலும் அணையாத தீபம் என்ன ?

பெண் — அழித்தாலும் அழியாத எண்ணம் என்ன ?

ஆண் — மறைத்தாலும் மறையாத மாயம் என்ன ?

பெண் — மழைபோல பொழிகின்ற இன்பம் என்ன ?

ஆண் — ஆறாது ஆறாது ஆசை வெள்ளம்

பெண் — அடங்காது அடங்காது காதல் உள்ளம்

ஆண் — தீராது தீராது சேரும் இன்பம்

பெண் — தெளியாது தெளியாது இருவர் உள்ளம்

## பாட்டு 4

இயற்றியவர் :
**கண்ணதாசன்**

பாடியவர் :
**டி. எம். சௌந்திரராஜன்**

நாதன் : ஹலோ மிஸ் ஹலோ மிஸ்
எங்கே போறிங்க — இன்று
ஏனிந்தக் கோபம்
கொஞ்சம் நில்லுங்க

தன்னந் தனியாகப் போகாதிங்க — உங்க
தளதள உடம்புக்கு ஆகாதுங்க
வழித் துணையாக வாரேனுங்க — இந்த
வாலிப மனசை மிஸ் பண்ணாதிங்க

கண்ணழகை கண்டால் கூட்டம் சேருங்க
காளையர்கள் நெஞ்சில் ஆசை தோணுங்க
மாப்பிள்ளை போலே நான் வரும்போது
பார்ப்பவர் உள்ளம் மாறுதுங்க

ஆசையுடன் பார்த்தால் மோசமில்லிங்க
ஆதரவைக் கேட்டால் பாவமில்லிங்க
நாட்டுக்கு நாடு வீட்டுக்கு வீடு
நடப்பது தானே ஓடாதிங்க

## பாட்டு 5

இயற்றியவர் : **கண்ணதாசன்**

பாடியவர் : **பி. சுசீலா**

சரசு : இரவினிலே என்ன நினைப்பு
இயற்கையிலே என்ன பிணைப்பு
மனதினிலே என்ன திகைப்பு
வரவில்லையோ இளஞ் சிரிப்பு

சந்தனச் சிலையொன்று அருகிருக்க
தாமரைக் கொடிபோல் இடையிருக்க
பந்தாடும் விழி பார்த்திருக்க
பால்போல் நிலவும் துணையிருக்க
முல்லை மல்லிகைப் பூவிருக்க
முத்து முத்தாக நகையிருக்க
தன்னை மறந்ததும் சரிதானே
தனிமை கொண்டதும் முறைதானே

பூமியின் வயிற்றில் பொன்னிருக்கும்
பூவையின் முகத்தில் கண்ணிருக்கும்
பொன்னுக்குக் கண்ணே பொருந்தாதோ
பொருந்தா தென்றல் வருந்தாதோ

அந்தி மந்தாரைப் பூப்போலே
அழகிய குங்குமம் நெற்றியிலே
மங்கல மேளம் முழங்கலையோ
மாப்பிள்ளை நெஞ்சம் மயங்கலையோ

## பாட்டு 6

இயற்றியவர் :
**கண்ணதாசன்**

பாடியவர் :
**டி. எம். சௌந்திரராஜ[ன்]**

நாதன் : நில்லடி நில்லடி சீமாட்டி — உன்
நினைவில் என்னடி சீமாட்டி
வில்லடி போடும் கண்களிரண்டில்
விழுந்த தென்னடி சீமாட்டி

தொட்டால் சுருங்கிச் செடியைப் போலே
நாண மென்னடி சீமாட்டி
கட்டான உடல் காயாயிருந்து
கனிந்த தென்னடி சீமாட்டி

சிட்டாய்ப் பறக்கும் கால்களிரண்டில்
தயக்க மென்னடி சீமாட்டி — இங்கு
வந்தது என்னடி சீமாட்டி
சங்கதி சொல்லடி சீமாட்டி

தந்தியை மீட்டும் கைகளாலே
தழுவிக் கொள்ளடி சீமாட்டி
வண்டு பறக்கும் கூந்தலுக்குள்
செண்டாக நான் வரட்டுமா

முந்தானையில் தொட்டில் கட்டி
இருக்க இடம் கிடைக்குமா
சங்குக் கழுத்தில் பொங்கும் மங்கலத்
தாலி ஒன்று தரட்டுமா

கண்ணடி பட்டது சீமாட்டி
கலக்கம் வந்தது சீமாட்டி
உன்னை யல்லாது இன்னொரு கள்ளி
உலகி லேதடி சீமாட்டி

ஹரிஹர அச்சகம், வேலூர்—போன் 356